அ.வ.எண். 8/2015 நாள்: 21.07.2026

பி.சா.2 திரு.சேகர்

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) எனது முதல்விசாரணை வாக்குமூலம் வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டதில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல, நான் சொல்ல சொல்ல வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டது. வாதி என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் கூடுதலாக இடம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். வழக்கு சொத்து என்ன வகைபாட்டை சேர்ந்தது என்றால் தரிசு ஆகும். என்னுடன் பிறந்த சகோதரர், சகோதரி எத்தனை பேர் என்றால் என்னை சேர்த்து ஆண்–4, பெண்–4 ஆவோம். அவர்கள் 1.ராமதாஸ், 2.வனரோஜா, 3.ஜோதிமணி, 4.கொளசல்யா, 5. சேகர், 6. புருசோத்தமன், 7.ராணி, 8.சுசிலா. எனது முதல்விசாரணை வாக்குமூலத்தை 2, 5 பிரதிவாதிகளுக்காகவும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து ஆதியில் யாருக்கு சொந்தமானது என்றால் ஆசாரியார் மனைக்கட்டு, சொர்ணத்தம்மாள் என்பவருக்கு பாத்தியப்பட்டது.

2) எனக்கு பூர்வீகமான சொந்த ஊர் எது என்றால் அரசூர் ஆகும். தாவா சொத்தில குடியிருக்கதான் வந்தோம் என்றால் சரிதான். தாவா சொத்தில் எந்த வருடம் குடிவந்தோம் என்றால் சரியாக ஞாபகம் இல்லை, எனது அண்ணன் 1ம் பிரதிவாதி ராமதாஸ்க்குதான் தெரியும்.

(இந்த வழக்கு பாகபிரிவினை வழக்கு என்பதால் சமரச தீர்வு மையத்திற்கு அனுப்பிவைக்கப்படுகிறது. சமரச தீர்வு மையத்திலிருந்து அறிக்கை பெறப்படும் வரை குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது).

S.d/ Sekar

Taken down by me in the open court read over to the witness and admitted by him to be correct.

Sd/-P.Ramesh

DISTRICT MUNSIF, THIRUVAIYARU